PASSPORT | MSME | PAN | AADHAAR
FSSAI | PATTA | LEGALHEIR
2,4 WHEELER INSURANCE
PROPERTY TAX, EB - NAME TRANSFER
STATE AND CENTRAL GOVT AUTHORISED FRANCHISEE
ALL ONLINE SERVICES
இ-சேவை மையம்
8148231942 / 8144337349

தமிழ் குரல் மக்கள்
தினசரி காலை நாளிதழ்
tamilmakkalkural@gmil.com
RNI No.: TNTAM24840
உள்ளது உள்ளபடி

Oasis Grace
Engineering Projects Pvt Ltd
Build Your Future With Us
RTN.DR.R.SATHYANARAYANAN,
Director - Business Development
+91 9360136897 /
+91 8148231942
No.15, North Nada Street, Srinagar Colony, Saidapet, Chennai-600015
www.oasisgrace.in |
business@jmrgroup.org

# ஜார்க்கண்ட் மாநில நிறுவன தினத்தை முன்னிட்டு அம்மாநில மக்களுக்கு பிரதமர் வாழ்த்து

சென்னை – 16 நவம்பர், 2026 பிரதமர் நரேந்திர மோடி இன்று (15.11.2026) ஜார்க்கண்ட் மாநிலத்தின் நிறுவன தினத்தை முன்னிட்டு, அம்மாநில மக்களுக்கு வாழ்த்துகளைத் தெரிவித்துள்ளார்.

ஜார்க்கண்டை பழங்குடியினரின் பெருமை, கலாச்சார பன்முகத்தன்மை, இயற்கை வளம் ஆகியவற்றின் தனித்துவமான சங்கமம் என்று வர்ணித்துள்ள பிரதமர், அதன் அடர்ந்த காடுகள், அழகான நீர்வீழ்ச்சிகள், வரலாற்றுச் சின்னங்கள் ஆகியவை அதன் தனித்துவமான அடையாளத்தை வளப்படுத்துவதாகக் கூறியுள்ளார். அதே நேரத்தில் அதன் பாரம்பரியங்கள், பகவான் பிர்சா முண்டாவின் வீரம், தியாகக் கதைகள் ஆகியவற்றிலிருந்து தொடர்ச்சியான உத்வேகம் கிடைப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். கனிமங்கள், எரிசக்தி தொடங்கி கைவினைப்பொருட்கள், சுற்றுலா வரை மாநிலத்தில் உள்ள மகத்தான ஆற்றலை அவர் எடுத்துரைத்துள்ளார். கடின உழைப்பும் திறமையும் கொண்ட மக்களின் உறுதியாலும் திறமையாலும், ஜார்க்கண்ட் வளர்ச்சியின் புதிய உயரங்களை எட்டும் என்று நம்பிக்கை தெரிவித்துள்ளதோடு, அனைவருக்கும் மகிழ்ச்சியும் செழிப்பும் கிடைக்க பிரதமர் நரேந்திர மோடி வாழ்த்துத் தெரிவித்துள்ளார்.